ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2166/13 - 2020 මාර්තු මස 11 වැනි බදාදා - 2020.03.11
*2166/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் விஜயபால சிறீ நாராயன வாசல பண்டாரநாயக்க மொஹொட்டலாகே சீதா குமாரி அரம்பேபொல ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க வத்தளை-மாபோலை நகர சபை மற்றும் அதன் தவிசாளராக செயற்பட்டபோது மேற்கூறிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) ஆம் உப பிரிவின் கீழ் காட்டப்படும் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து 03 மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை முன்வைப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2152/ 14 ஆம் இலக்க, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானயக்கார அவர்களை உள்ளடக்கிய தனி நபர் விசாரணைக் குழு சபையின் விசாரணைக் காலத்தினை 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வரை இங்கு நீடிப்பதாக அறிவிக்கின்றேன்.

விஜயபால சிறீ நாராயன வாசல பண்டாரநாயக்க
மொஹொட்டலாகே சீதா குமாரி அரம்பேபொல,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
மேல் மாகாண சபை கட்டடத் தொகுதி,
பத்தரமுல்லை,
2020, மாச்சு 02.

*03-931*